ஹோமியோபதி

நிர்வாக ஆசிரியர் : டாக்டர் V. R. மூர்த்தி

நவம்பர் 1952

ஹோமியோபதியும் அரசாங்கமும் 2

பல்ஸடில்லா 4

சிகிச்சைக் குறிப்பு ... 11

அனுபவ கேஸ் விபரம் ... 16

வயிற்றில் மருந்து 18

டாக்டர் மூர்த்தியின்

H. P. P. ஔஷதங்கள்

1 முதல் 24 ஔஷதங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முக்கியமான வியாதிக்கு ஏற்றது.

இது சம்பந்தமான புத்தகத்திற்கு எழுதவும்

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

ஹோமியோ ஹவுஸ் **கும்பகோணம்**

சென்னை விலாசம்

289, N. S. C. B. ரோடு, — மதராஸ்-1

ஹோமியோபதி

VOL. 6 1952 நவம்பர் NO. 11

ஹோமியோபதியும் அரசாங்கமும்

சென்ற 17—11—52 அன்று சென்னை மேல் சட்டசபையில் சுகாதார மந்திரி கனம் ஏ. பி. ஷெட்டி அவர்கள் தற்சமயம் அரசாங்கத்திற்கு ஹோமியோபதி வைத்தியத்தை அங்கீகரிக்கும் யோசனை கிடையாது என்பதை யாதொரு சந்தேகத்திற்கும் இடமின்றி தெரிவித்துவிட்டார். இது விஷயத்தைப் பற்றி நமது மந்திரி இவ்வளவு தெளிவாகக் கூறியதற்கு நாம் உண்மையாகவே அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த நிலைமைக்குக் காரணங்களையும் அவர் எடுத்துக் கூறியது, உண்மையிலேயே அவர் இவ்வைத்திய விஷயமாக எந்த அளவுக்கு விஷயத்தைத் தெரிந்து கொண்டிருக்கிறார் என்பதையும், இவ்விஷயத்தில் எவ்வளவு சிரத்தை கொண்டிருக்கிறார் என்பதையும் எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது.

"ஹோமியோபதி முறையில் பலர் தொழில் செய்வது உண்மையே. ஆனால் சர்க்கார் அம்முறையை அங்கீகரித்து ஹோமியோபதி வைத்தியர்களைப் பதிவு செய்வதானால், அம்முறைக்காக ஒரு கல்லூரியும் ஒரு ஆஸ்பத்திரியும் ஏற்படுத்த வேண்டி வரும். இது தற்போது உள்ள நிதி நிலைமைகளில் சாத்தியமில்லை" என்று கூறப்பட்டது. இது முற்றிலும் உண்மை. அரசாங்கமே ஒரு ஹோமியோபதிக் கல்லூரியையும், ஒரு ஆஸ்பத்திரியையும் ஆரம்பிக்காத வரையில் தற்சமயம் தொழில் செய்பவர்களை மாத்திரம் பதிவு செய்வதில் யாதொரு அர்த்தமும் இல்லை. இந்த உண்மையை நன்கு தெரிந்து கொண்டு அதன்படி நடந்துகொள்ளவும், அதை தைரியமாய் அறிவிக்கவும் நமது அரசாங்கம் முன்வந்தது

பாராட்டக்கூடியதே. இன்றைய சூழ்நிலையில் அரசாங்கம் ஹோமியோபதிக்கென்று ஒரு கல்லூரியும் ஒரு வைத்திய சாலையும் முதன் முதலில் நிருவாமல், ஹோமியோபதி வைத்தியத்தைப் பெயரளவில் அங்கீகரிப்பதும், ஹோமியோபதியர்களை ரிஜிஸ்டர் செய்வதும் அர்த்தமற்ற விஷயங்கள் என்பதுடன் மாத்திரமில்லாமல், இது நம் நாட்டில் ஹோமியோபதி வைத்திய முறையின் வளர்ச்சியையே தடை செய்துவிடும் என்பது நிச்சயம். இந்த உண்மையை நமது சென்னை அரசாங்கம் தவிர இதர இராஜ்யங்கள் அறிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

இந்த சூழ்நிலையில் நம்மிடையே சிலர், "ஹோமியோபதிக்கு அங்கீகாரம், ஹோமியோபதியர்களுக்குப்பதிவுமுறை" என்று ஏன் கோஷமிடுகிறார்கள் என்று புரியவில்லை. இவ்வாறு அர்த்தமற்ற கூச்சலிடுபவர்கள், தங்கள் நன்மைகளையோ, அல்லது அரசாங்கத்தின் சூழ்நிலையையோ, நமது அரசாங்கம் சிந்தித்துப் பார்த்த அளவுகூட, சிந்தித்துப் பார்க்கவில்லை என்றுதான் நினைக்கவேண்டி இருக்கிறது.

இலங்கையில் வைத்தியசாலைத் திறப்புவிழா

இலங்கை பெட்டி கோலாவில் முதலாவது குறுக்கு கல்லடித் தெருவில் டாக்டர் **K. S. P.** ஸ்வாமி **M. I. H (Homeo) Madras** அவர்களின் முருகன் வைத்தியசாலை சென்ற 7—11—52 அன்று திரு. வா. பொன்னுதுரை வைத்தியர் **(Siddah and Ayurvedic Physician and Member of the Committee for Registration of Practitioners of Indigenous medicine)** அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அத்தருணம் அனேகர் சமூகம் தந்து ஆசிகூறினராம்.

பல்ஸடில்லா

(Translation from Dr. Nash's Leaders in Therapeutics)

மிருதுவும், சாந்தமும் விட்டுக்கொடுக்கும் சுபாவமுள்ள குணம்; வருத்தமும், மனச்சோர்வும், சடுதியில் அழுது விடுதல், செம்பட்டை முடி, நீல நிறமுள்ள கண்கள், மங்கலான முகம், தசைகள் மிருதுவாகவும் தொள தொளப்பாகவுமிருத்தல்.

அடிக்கடி மாறும் குறிகளுள்ள ஔஷதம்: வலிகள் ஒரு மூட்டிலிருந்து வேறு மூட்டுக்குச் சென்றுகொண்டே இருத்தல்; இரத்தப் பெருக்கு எடுப்பதும் நிற்பதுமாக இருத்தல்; மலவெளியேற்றம் ஒவ்வொரு தடவை ஒவ்வொரு விதமாக இருத்தல், சுரத்தில் குளிர் எடுப்பது ஒவ்வொரு தடவை ஒவ்வொரு விதமாக இருத்தல்; குறிகள் சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஒரே குளறுபடியாக இருத்தல்.

வாயில் கெட்ட ருசி, இது காலை நேரங்களில் <, அத்துடன் அதிகமாக வறண்டு இருத்தல், **ஆனால் தாகமே இருப்பதில்லை.**

சீரணம் அடிக்கடி கெட்டு விடுதல்; இது முக்கியமாகப் பணியாரங்கள் அல்லது அதிகக் கொழுப்பு சத்துள்ள ஆகாரங்களை உண்பதால் உண்டாதல்.

கெட்டியான காரமற்ற போக்குகள் எல்லாப் பூந்தசைகளிலிருந்தும் வெளிப்படுதல்.

மாதவிடாய் தாமதப்படுதல், மிகவும் குறைவாக இருத்தல், அல்லது அடக்கப்பட்டே இருத்தல்; இது முக்கியமாகப் பாதங்கள் தண்ணீரினால் நனைக்கப்பட்டதினால்.

தன்மைகள் : < உஷ்ணமான அறைகளில், சூடான ஒற்றிடங்கள், அதிக இரும்பு சத்துள்ள ஔஷதங்களை உட்கொண்டதால்; வலிகளுடன் கூட குளிரும் இருத்தல். > குளிர்ச்சியான வெளிக்காற்றில் உலாவுதல், சில்லிப்பான ஆகாரங்கள், பானங்கள், கெட்டியாக இறுக்கிக் கட்டுவதால் தலைவலி சமனப்படுதல்.

வலிகளுடன் குளிர் இருந்து கொண்டே இருத்தல்; எவ்வளவுக்கவ்வளவு வலிகள் அதிகமோ அவ்வளவுக்கு குளிரும் அதிகம். (ஏராளமான வியர்வையுடனிருந்தால் – *சாமோமில்லா;* மயக்கத்துடனிருந்தால்— *ஹிப்பர் சல்பர்;* அடிக்கடி நீர் பிரிதலுடனிருந்தால் — *தூஜா;* பிதற்றல்களுடனிருந்தால் — ***விராட்ரம் ஆல்பம்.***)

* * *

பல்ஸடில்லா வியாதியஸ்தரின் தன்மை *நக்ஸ்வாமிகா*வின் தன்மைக்கு அனேகமாக நேர் எதிரிடையாக இருக்கின்றது. *நக்ஸ்வாமிகா*வை ஆண்களின் ஔஷதம் என்றும் *பல்ஸடில்லா*வைப் பெண்களின் ஔஷதம் என்றும் சொல்லுவதுண்டு. இதன் தாத்பர்யம் என்னவெனில் முதலாவதின் குறிகள் அதிகமாக ஆண்களிடையே காணப்படுகிறதென்பதும் மற்றயதின் குறிகள் அதிகமாகப் பெண்களிடையே காணப்படுகிறதென்பதும்தான்.

இனி ஹெரிங் என்பவர் கூறியுள்ள மற்றுமொரு விசேஷமான குறியை கவனிப்போம். இவரைவிட இவ்விஷயத்தைத் தெளிவாகக் கூறியிருப்பவர்கள் யாரும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதாவது: *"மிருதுவும் சாந்தமும் விட்டுக்கொடுக்கும் சுபாவமுள்ள குணம்; ஒவ்வொரு விஷயத்திற்கும் அழுதல்; வருத்தமாகவும் நம்பிக்கையற்றும் இருத்தல், தனது அழுகையினுல் குறிகளைக்கூட சரிவரத் தெரிவிப்பதில்லை."* *மறுபடியும்* *"மணல் நிறமுள்ள சிகை *நீல நிறமுள்ள கண்கள், வெளுத்த முகம், எப்பொழுதும் மனத்திற்குள்ளேயே அடக்கப்பட்ட வருத்தமுடன், கீழ்படிதலுள்ள குணம்"* (இவை நீடித்த வியாதியாயிருந்தால் *சில்கா*) ஆகவே இதுதான் வார்த்தைகளால் சொல்லக்கூடிய **பல்ஸடில்லாவின்** தன்மைகள். இவைகளை ஒரு வியாதியஸ்தரிடையே கண்டால், தசை மாறுதலினுல் ஏற்பட்ட குறிகள் எதுவாயிருந்தாலும் சரி, *பல்ஸடில்லா* உபயோகமாக இருக்கும். இதற்கு விதிவிலக்குகள் மிகவும் குறைவு. ஆகவே தசை மாறுதல்களை மாத்திரம் அதிகமாகக் கவனித்துவிட்டு, குறிகளை கவனிக்காமலிருப்பது தவறு என்று நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

விரிவாக வேலை செய்யக்கூடிய ஔஷதங்களில் *பல்ஸடில்லா* ஒன்று. பாரிங்டன் என்பவர் இருபத்தி மூன்று வெவ்வேறு உபாதிகளில் இது உபயோகப்படும் என்று தெரிவித்தார். எனினும் இதுவும் முழுவதும் சொல்லிவிட்டதாக ஆகமாட்டாது. *ஹியூஸ்* என்பவரின் *பர்மாகோடைனமிக்ஸ்* என்னும் புத்தகத்தில் *பல்ஸடில்லா*வைப் படிப்பீர்களானுல், இதை அவர் அநேக வியாதிகளுக்கு சிபார்சு செய்திருந்தபோதிலும், மற்ற ஔஷதங்களைப் பற்றித் தசை மாறுதல் குறிகளை அனுசரித்து சிபாரிசு செய்வதைப்போல, இதைப்பற்றி அவர் தெரிவிக்கவில்லை. முழுவதும் தசை மாறுதல்களை நம்புவதோ, அல்லது முழுவதும் குறிகளை நம்புவதோ முட்டாள்தனம் என்று நான் நினைக்கிறேன். தசை மாறுதல் குறிகளும், மற்றக் குறிகளும் சேர்ந்துதான் கவனிக்கப்படவேண்டும். இவைகளை வேறுபடுத்தி கவனிக்க முடியாது. ஒன்றையும் விட்டுவிடவும் முடியாது. தசை மாறுதல் குறிகள் என்பவை (சில சமயம்) டாக்டர்கள் சொல்லக்கூடியவை; மற்றக் குறிகள் வியாதியஸ்தர் சொல்லக்கூடியவை.

பல்ஸடில்லாவுக்கு மற்றுமொரு நிலைமை உண்டு; இதை ஒரு விசேஷ அம்சமாகக்கூடக் கருதலாம், ஆனுல் இதைப்பற்றி ஹெரிங் குறிப்பிட

வில்லை. அதாவது, *குறிகள் மாறிக்கொண்டே இருப்பது (இக்னேஷியா, நக்ஸ் மாஸ்சாடா)* ஹெரிங் தெரிவித்ததெல்லாம், **"இடம் மாறும் வலிகள். ஒரு இடத்திலிருந்து மறு இடத்திற்கு சீக்கிரமாக மாறுதல். அத்துடன் வீக்கத்துடனும் சிவந்தும் இருக்கும் மூட்டுகள்."** இப்பொழுது இது கீல் வாதத்தில் இருக்குமானல் *(மங்கானம் அஸிடேட், லாக்கானினம், காலி பைக்ரோமிகம், கால்மியா.)* அதுவும் **பல்ஸடில்லா**வின் தன்மையும் இருக்குமானல், அவ்வியாதியை இதனுல் சொஸ்தம் செய்து ஒரு அதிசயத்தை நிகழ்த்தலாம். ஆனல் இந்த இடம் மாறுதலும், மற்ற மாறுதல்களும் வலியில் மாத்திரம்தான் இருக்குமென்பதில்லை, ஆனல் வியாதியஸ்தரின் தன்மையிலும் இம்மாதிரியான மாறுபாடுகளைக் காணலாம். வியாதியஸ்தர் இப்பொழுது சிடுமூஞ்சியாகவும், உடனே அழுபவராகவும் அல்லது சாந்தமும் ரம்மியமுமுள்ளவராகவும் இருக்கலாம். சிடுசிடுப்பாக இருக்கும் போதும் சீக்கிரமாக அழும்படியாகவும் செய்துவிடலாம். இரத்தப் பெருக்காக இருந்தால், அது பெருக்கெடுப்பதும், நிற்பதுமாக மாறி மாறி ஏற்படும். அதாவது அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கும். வயிற்றுப் போக்கில், மலம் அடிக்கடி நிறம் மாறி வெளியேறும், பச்சையாகவும், மஞ்சளாகவும், வெள்ளையாகவும், தண்ணீர் போலவும், குழகுழப்பாகவும் இருக்கும். குர்ன்ஸே என்பவர் சொல்லுவதுபோல "இரண்டு தடவை வெளியேற்றப்பட்ட மலம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை." (ஸானிகுலா) இது கோடைக் காலத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றுப் போக்கில் காணப்படும்.

சில சமயம் நம்மிடம் சில வியாதியஸ்தர்கள் வருவார்கள்; அவர்களுடைய வியாதியை ஆராயும்போது அதற்குத் தலையும் வாலும் இல்லாமல் ஒரே குழப்பமாக இருக்கும். உபத்திரவமும் வலியும் ஒரு சமயம் ஒரு இடத்தில் காணப்படும், மறு சமயம் வேறு இடத்தில் காணப்படும் குறிகள் ஒன்றுக்கொன்று நேர் எதிரிடையாக இருப்பதாகக்கூடத் தெரியும். இந்த மாதிரியான நிலைமைகளில் நமக்குப் **பல்ஸடில்லா** ஞாபகத்திற்கு வர வேண்டும். அனேக சந்தர்ப்பங்களில் இது குறிகளைத் தெளிவாக்கி, வியாதியையும் சொஸ்தம் செய்துவிடும். **இக்னேஷியா**விற்குக்கூட இம்மாதிரியான அடிக்கடி மாறும், காரணமற்ற,ஒன்றுக்கொன்று விரோதமான குறிகள் உண்டு. இவை இரண்டும் நிகரற்ற "பெண்களின் ஔஷதங்கள்" ஆகும்.

நக்ஸ்வாமிகாவைப் போலவே, **பல்ஸடில்லா**வும் சீரணக் கோளாறுகளுக்கு ஒரு பெரிய ஔஷதம் ஆகும். குறிகள் **"வாயில் கெட்ட ருசி, இது முக்கியமாகக் காலை நேரங்களில்; ஒன்றுமே ருசிப்பதில்லை, அல்லது ஒன்றுக்குமே ருசி இருப்பதில்லை".** (*பிரயோனியா*வில் கெட்ட ருசியுடன் நாக்கில் மாசு படிந்திருப்பதும், தாகமும்; **பல்ஸடில்லா**விற்கு தாகமே கிடையாது.)

"காலை நேரங்களில் வாய் அதிகமாக வறண்டு இருத்தல் ஆனல் தாகம் கிடையாது. பணியாரங்கள், புஷ்டியுள்ள,முக்கியமாகக்கொழுப்

புள்ள ஆகாரங்களை சாப்பிட்டதால் ஏற்பட்ட வயிற்றுகோளாறுகள்.' (பொதுவாக கொழுப்புள்ள ஆகாரங்கள் என்று நான் கூறுவேன்.) இவைகள் நம்பத்தகுந்த குறிகள், ஹெரிங் கொடுத்திருக்கிறர். இவைகள் *நக்ஸ்வாமிகா* வின் குறிகளைப் போல் இருக்கவில்லை. *நக்ஸ்வாமிகா* வியாதியஸ்தர்களுக்கு கொழுப்புள்ள பதார்த்தங்கள் கெடுதல் செய்வதில்லை. அதற்கு பதிலாக அவர்களுக்கு இம்மாதிரியான ஆகாரங்கள் பிடித்திருக்கும், உண்டாலும் உடலுக்கு ஒத்துக்கொள்ளும். *நக்ஸ்வாமிகா*வில் கதகதப்பான ஆகாரங்கள் ஒத்துக்கொள்ளும், *பல்ஸடில்லாவிலோ* சில்லென்றிருக்கும் ஆகாரங்களே ஒத்துக்கொள்ளும்.

வாயில் கெட்ட ருசி இருந்துகொண்டே இருக்கும். ருசி இல்லாமலிருப்பதும், வாசனை தெரியாமலிருப்பதும் அடிக்கடி இருந்து கொண்டிருக்கும் *பல்ஸடில்லாவில்* உலர்ந்த வாயும் ஆனுல் தாகமில்லாமல் இருப்பதும். *மெர்கூரியஸில்* ஈரப்பசையுள்ள வாயாயிருந்தாலும் ஏராளமான தாகம் இருப்பது எவ்வளவு அதிசயமாக இருக்கிறது!

இதற்கு சரியான காரணத்தைத் தெரிவிக்க எனக்குத் தெரியாது இதற்குக் காரணம் என்னவென்று கண்டுபிடிக்க வேண்டிய அவசியமில்லாமல் அந்த நிலைமையையே மாற்றிவிடக்கூடிய சக்தி நம்மிடம் இருப்பது நல்லதுதான். ஆனுல் இவைகளுக்கு ஒரு காரணம் இருக்கத்தான் வேண்டும்; அது நமக்குத் தெரிந்துதான் ஆகவேண்டுமென்பதில்லை.

ஒரு ஹோமியோபதி கற்றுக்குட்டிகூட *பல்ஸடில்லாக்* குறிகளை *நக்ஸ்வாமிகா*வின் குறிகளாகக் கருதமாட்டார். ஆனுலும் சில வைத்தியர்கள் இந்த இரண்டு ஔஷதங்களையும் சில மணிகளுக்கு ஒன்ருக மாற்றி மாற்றிக் கொடுப்பதைக் கண்டிருக்கிறேன்.

பூந்தசைகளால் மூடப்பட்ட சீரண உறுப்புகளில் *பல்சடில்லா* செய்யக்கூடிய வேலைகளை கவனித்துவிட்ட பிறகு பொதுவாகவே பூந்தசைகளில் பல்ஸடில்லாவின் குணங்களை ஆராய்வோம். பூந்தசைகளில், மூடப்பட்ட உறுப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் *நீர்களை* கவனிப்போம். இந்த நீர்கள் *கெட்டியாகவும் காரமற்றதாகவும்* மஞ்சள் கலந்த பச்சை நிறமாகவும் இருக்கும். இவை மூக்கிலிருந்து வரும் சளி, ஸ்திரீகளுக்கு ஏற்படும் வெள்ளைப்பாடு (Leucorrhoea) இருமி வெளியேற்றப்படும் கோழை, வெட்டை நீர் (Gonorrhoea), இரணங்களிலிருந்து வெளியேற்றப்படும் சீழ், மற்றும் காதுகளிலிருந்தும் கண்களிலிருந்தும் வெளியேற்றப்படும் நீர்கள். பொதுவாகக் கவனிக்குங்கால், எல்லாப் பூந்தசைகளுடன் கூடிய உறுப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் நீர் என்றுகூட சொல்லிவிடலாம்.

*பல்ஸடில்லா*வில் வெளியேற்றப்படும் கோழை, கெட்டியாகவும், பச்சை நிறமாகவும் காரமற்றதாகவும் இருப்பதுடன்கூட அதன் ருசி கசப்பாக

இருக்கும். **ஸ்டானம்** என்னும் ஔஷதத்தில் வெளியேற்றப்படும் கோழை தித்திப்பாகவும், ***காலீ ஹைட்ரோ ஐயோடிகம் ஸெபீயா*** இவை இரண்டிலும் வெளியேற்றப்படும் கோழை உப்புக் கரிப்பாகவும் இருக்கும். டாக்டர் சூஸ்லர் என்பவரின் தாது உப்புக்களில் ஒரு ஔஷதமாகிய ***காலீ ஸல்பியூரிகம்*** என்பது, கோழை முதலிய நீர் வெளியேற்றத்தில் அனேகமாக ***பல்ஸடில்லாவை*** ஒத்திருக்கின்றது. இது மாத்திரமல்ல, அடிக்கடி இடம் விட்டு இடம் மாறும் வலிகள், மாலே நேரங்களில் உபாதி அதிகம் ஆதல், குளிர்ச்சியான திறந்த வெளிக் காற்றில் உபாதிகள் சமனப்படுதல் முதலியவைகளில்கூட இத்துடன் ஒத்து இருக்கிறது. ***காலீ ஹைட்ரோ ஐயோடிகத்***திற்குக்கூட உபாதிகள் திறந்தவெளிக் காற்றில் சமனப்படுவதும், உஷ்ணமான அறைகளில் உபாதிகள் அதிகமாவதும் உண்டு. நீர்கள் வெளியேற்றப்படுதல், அதுவும் முக்கியமாக கப வெளியேற்றத்தில், பச்சை நிறம் என்னும்பொழுது ***கார்போ விஜி, லைகோபோடியம், பாரிஸ், பாஸ்பரஸ், சல்பர்*** இவைகளிலும் அதேபோன்ற பச்சைநிறமுள்ள கோழை வெளியேற்றம் இருக்கும். ஒரே குறி பல ஔஷதங்களில் இருக்கும்போது மற்றக் குறிகளைக் கொண்டுதான் நாம் சரியான ஔஷதத்தை தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஆல்பனி என்ற ஊரில் க்ஷயரோகம் என்று கருதப்பட்ட ஒரு வியாதியஸ்தரைக் கவனிக்க ஒரு வைத்தியர் கூப்பிடப்பட்டார். இந்த வியாதியஸ்தருக்கு இதற்குமுன் அல்லோபதி வைத்தியம் செய்யப்பட்டது. டாக்டர் வியாதியஸ்தரைப் பரிசோதித்த பின்னர், "தாங்கள் என்னவென்று நினைக்கிறீர்கள்" என்று கேழ்க்கப்பட்டார். "ஸ்டான்னம்" என்று டாக்டர் தெரிவித்தார். "என்ன?" என்று மறுபடியும் அதிசயத்துடன கேழ்க்கப்பட்டவுடன், டாக்டர் "ஸ்டான்னம்" என்று சொல்லிவிட்டு, **ஸ்டான்னம்** என்பது ஒரு ஔஷதத்தின் பெயர் என்றும், அது ஒரு வியாதியின் பெயர் அல்லவென்றும் தெரிவித்தார். இந்த ஔஷதம் ஷை கேசுக்குக் கொடுக்கவும் பட்டது, வியாதியும் சொஸ்தம் செய்யப்பட்டது.

இனி ***பல்சடில்லா*** ஸ்திரீகளின் ஜனன உறுப்புகளில் எவ்வாறு வேலை செய்யும் என்பதை கவனிப்போம். இந்த உறுப்புகளில் ஏற்படும் கோளாறுகளை நிவர்த்திப்பதாலும், மற்றும் ஸ்திரீகளின் குணதிசயங்கள் இந்த ஔஷதத்திற்கு ஏற்பட்ட குறிகளில் இருப்பதாலும்தான் இதை ஒரு ஸ்திரீகளின் ஔஷதம் என்று முதலிலேயே கூறப்பட்டது. "***மாதவிடாய் அதிகத்தாமதமாகவும், மிகவும் குறைவாகவும் அல்லது அமுக்கப்பட்டும் இருத்தல் இவ்வாறு மாதவிடாய் அமுக்கப்பட்டு இருத்தலின் காரணம், மாதவிடாய் ஏற்படும் காலத்தில் குளிர்ந்த தண்ணீரில் காலே வைத்ததினுல் இருக்கலாம்.***" தவிர அதிக அமைதியற்ற தன்மையுடனும், உடலே அங்கும் இங்குமாக அலட்டிக்கொள்ளும்படியான வலியுடன்கூடிய மாதவிடாய். மாதவிடாய்ப்

போக்கில் அடிக்கடி மாறுபாடுகள் ஏற்படும் என்பதை ஏற்கனவே சொல்லி விட்டோம்; அதாவது, போக்கு நிற்பது, மறுபடி போவது, மறுபடி நிற்பது முதலியன. வலியுடன்கூடிய மாதவிடாயிலும் அவ்வாறே.

இம்மாதிரியான மாதவிடாய்க் கோளாறுகளில் ***பல்ஸடில்லா***வுக்கு போக்கு ஆரம்பிக்க இருக்கும்போது, பாதங்களைத் தண்ணீரில் நனைத்தாலோ அல்லது பாதங்களில் சில்லிப்புத் தட்டியதாலோ அது அமுக்கப்பட்டுப் போதல் என்பது முக்கியமான விஷயம். இம்மாதிரியான காரணத்தால் சாதாரணமாக வெளியேற வேண்டிய மாதவிடாய்ப் போக்குத் தடைப்பட்டுப் போகுமானால் அந்த நபருக்கு க்ஷயரோகம் கூட ஏற்படலாம். இந்த நிலைமை ஏற்படாமல் பல்ஸடில்லா காப்பாற்றி விடும்.

ஆகவே, வீரியப்படுத்தப்பட்ட ஒளஷதங்களில் நம்பிக்கை இல்லாத சிலர் செய்வது போல பல்ஸடில்லாவின் தாய் திராவகத்தை வேளை ஒன்றுக்குப் பத்து சொட்டுகள் வீதம் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. ***பல்சடில்லாவை*** உயர்ந்த வீரியங்களிலும், மிகவும் உயர்ந்த வீரியங்களில்கூடக் கொடுத்து அது நல்ல பயன் அளிக்கும் என்று எதிர்பார்க்கலாம். நான் அனேக சந்தர்ப்பங்களில் ***பல்சடில்லா*** மன நிலைமை உள்ள வாலிபப் பெண்களுக்கு ஏற்பட்ட தாமதப்பட்ட மாதவிடாயை ஸ்வான் என்பவரின் MM. வீரியத்தைக் கொடுத்தும் பிங்கிள் என்பவரின் CM. வீரியத்தைக் கொடுத்தும், உடனேயும் இயற்கையாகவும் தோன்றுவதைக் கண்டிருக்கிறேன். (***காலீ கார்பானிகம், டியூபர்குலீனம்,*** முதலியவைகூட அவ்வாறே வேலை செய்யும்) அதுபோலவே அடக்கப்பட்ட மாதவிடாயும் மறுபடி தோன்றுவதையும் கண்டிருக்கிறேன். இம்மாதிரியான மாதவிடாய்க் கோளாருள்ள வியாதியஸ்தர் ஒருவருக்கு, இவைகளில் ஒன்றை உயர்ந்த வீரியத்தில் கொடுத்துவிட்டு அது வெற்றியளிக்காவிட்டால், நான் கூறுவது அனைத்தும் தவறு என்று உடனே நிச்சயம் செய்து விடாதீர்கள். ஏனெனில் பல்ஸடில்லா மாத்திரமே இம்மாதிரியான உபாதிகளுக்கு ஒளஷதமல்ல. மருந்து கொடுப்பவர் தவறு செய்துவிட்டு, அனேக சந்தர்ப்பங்களில் ஹோமியோபதியின் மேல் குறை கூறப்படுகிறது. ***பல்சடில்லாவைவிட மெக்னீஷியாபாஸ்*** அனேக வலியுடன்கூடிய மாதவிடாய்க் கோளாறுகளை நிவர்த்தி செய்யும். எனினும், அதுவும் எல்லா வியாதியஸ்தர்களுக்கும் பொருத்தமாக இருக்காது. ***ஒவ்வொரு வியாதியஸ்தரையும் தனித்தனியாக ஆராய்ச்சி செய்வதுதான் முறை.***

முடிவாகக் கூறுமிடத்து இந்த அபூர்வமான ஒளஷதத்தின் முக்கிய விசேஷம், இதன் தன்மையில்தான் இருக்கிறது. ***"குளிர்ந்த காற்றிலும் சில்லென்ற ஒற்றிடங்களினுலும் சமனம்".*** வியாதியஸ்தர் திறந்த வெளிகளிலும், குளிர்ந்த காற்று மேலே பட்டாலும் பொதுவாக சௌகர்யம் அடைவார். உஷ்ணமான மூடின அறைகளிலிருக்கும் போதும் அசௌகர்யம்

அடைவார் என்பதுடனில்லாமல், சரீரத்தில் அங்காங்கே தோன்றும் உபாதிகளில்கூட, உதாரணமாய், தலைச்சுற்றல், தலைவலி, கண் காதுகளில் வலிகள் கண் இமைகளில் அரிப்பு, காதுகளில் ஓசை, சலதோஷம், முகத்தில் வலி, பல்வலி, வயிற்று வலி, பிரசவகால வலிகள், துடை நரம்புவலி, இரணங்கள் இவைகள் எல்லாம்கூட திறந்த வெளிக்காற்றில் சமனம் அடையும். எந்தெந்த உபாதிகள் சில்லென்று குளிர்ந்த காற்றில் சமனமடைகின்றனவோ, அவை அனைத்தும் திறந்த வெளிக்காற்றில் மெதுவாக உலாவுவதினாலும் சமனப்படும். ***(பெர்ரம்) பல்சடில்லாவும் ரஸ்டாக்ஸும்,*** மெதுவாக உலாத்துவதினால் சௌகர்யம் அடையும், ஆனால் ***பல்சடில்லா*** சில்லென்ற காற்றில் உலாவுவதினால் சமனமடையும், ஆனால் ***ரஸ்டாக்ஸ்*** கதகதப்பான காற்றில் உலாவுவதினால் சமனம் அடையும் என்பது ஞாபகமிருக்கவேண்டும்.

பல்ஸடில்லா வியாதியஸ்தருக்கு கதகதப்பான ஒற்றிடங்கள் உபாதியை அதிகப்படுத்தும்; கதகதப்பான அறைகள் ஒத்துக்கொள்ளாது; படுக்கையின் கதகதப்பு அரிப்பை உண்டுபண்ணும் ***(மெர்கூரியஸ்)*** சில்லென்றிருக்கும் பானங்களைக் குடித்தால் அவை வயிற்றில் தங்கும், சூடான பானங்கள் வாயாலெடுத்துவிடும்.

உஷ்ணத்தினால் உபாதிகள் அதிகமாகும் அநேக ஔஷதங்கள் உண்டு. ஆனால் அவை அனைத்துக்கும் தலைமை வகிப்பது ***பல்சடில்லா***தான். ***ஆர்சனிகத்***திற்கு உஷ்ணம் அல்லது சூடு எந்த அளவுக்கு சௌகர்யம் செய்யுமோ அந்த அளவுக்கு சில்லிப்பு ***பல்சடில்லா***வுக்கு சௌகர்யம் செய்யும்.

இனி ***பல்ஸடில்லா***வைப்பற்றி முடிவாகக் கூறுமிடத்து இவ்வௌஷதத்திற்கு ஏற்பட்ட சில முக்கியமான குறிகளைக் கூறுவோம்.

"***அயம்*** சம்பந்தமுள்ள ஔஷதங்களை அதிகமாக உட்கொண்டதினால் ஏற்பட்ட உபாதிகள்." "நீர்க்கொளுவான் என்னும் அம்மை நோய்க்குப் பிறகு தோன்றிய பல நீடித்த உபாதிகள்." "தலைவலிகள் அமுக்குவதினாலும் கெட்டியாக இருக்கிக் கட்டுவதாலும் சமனமடைதல்." ***(அர்ஜண்டம் நைட்ரிகம், அபிஸ்மெல்லிபிகா)*** அடிக்கடி சிறு நீர் விடவேண்டிவருதல்; ***இது படுத்தால் அதிகமாதல்***" "வெட்டை நீர் வெளிப்படுவது தடைப்பட்டு பீஜங்கள் வீங்குதல்." வலிகளுடன் குளிர் இருத்தல்; இருந்தாலும் குளிர் காற்று மேலேபட இஷ்டப்படுதல்." "சரீரத்தின் ஒரு பாதி மாத்திரம் வியர்த்தல்." "அழற்சியுற்ற பாகங்கள் நீல நிறமாக இருத்தல்." ***லாக்கஸிஸ், டாரண்டுலா குபன்ஸிஸ்.)*** "சரீரம் முழுவதும் நாடித் துடிப்புகள்." தாளம்மை வீக்கம் குறைந்து பீஜங்களோ ஸ்தனங்களோ வீங்குதல்."

மேலே கூறிய எந்த உபாதிகளிலும், ***பல்சடில்லா***வுக்கு உரியதான மனக் குறிகளும் தன்மையும் இருக்குமாயின், நன்கு வேலை செய்யும். அவை காணப்படாவிடின் பலனை எதிர் பார்க்க முடியாது.

(Copy right reserved)

சிகிச்சைக் குறிப்பு

(Dr. N. R. Dhakshinamurthi, Gunamangalam.)

பெயர்: வீராசாமி பிள்ளை, சென்னிவனம்.
வயது: சுமார் 22
தேதி: 16—9—52

உபாதிகள்: தொடுவது அசைப்பதில் பயம். எப்போதும் தூக்கக் கலக்கம். சாப்பிடுவது கிடையாது. படுக்கையில் பிரளவுஞ்சக்தி யின்மை. திகில். மெலிந்த நாடி. இருதயம் 140. சரீர உஷ்ணம் 105°. சுமார் 2 வருஷங்கட்கு முன் ஆண் குறியில் புண். வெட்டை நோய்க்காக அல்லோபதி சிகிச்சை செய்யப்பட்டு சரீரத்தில் வட்ட வட்டமான கருஞ்சிவப்புப் புள்ளிகளுடனிருந்தார். இடது இடுப்பின் சப்பை பாகங்களிலும், வலது காலர் போன்ஸ் (காரையெலும்புக் கருகில்) கழுத்திலிருந்து முன்புறம் ஸ்தனக் காம்பு வரையிலும் பின் புறம் ஸ்காபுலாவின் கீழ்ப்பாகம் வரையிலும் அதிக வீக்கம். இரண்டு கால்களும் சுருட்டிக்கொண்டிருந்தன. நீடித்த மலபந்தம். இந்த உபாதிகளுக்காக காற்று சேஷ்டையென்று பல மந்திரவாதிகளை யழைத்து குறி, பூசை முதலிய ஆடம்பரங்கள் செய்து முடக்கம்மை யென்று ஒரு மாத காலம் வைத்திருந்துவிட்டார்கள். (15—5—52 முதல் 19—6—52 வரை.)

நான் சென்று நோயாளியைப் பார்த்தேன். மேற்கூறிய என்னால் கண்டுபிடிக்க முடிந்த விஷயங்களைத் தவிர வேறொன்றும் புலப்பட வில்லை. நோயாளி வீட்டாரை நோயின் காரணத்தைப் பற்றி விசாரித்ததில் பிரஸ்தாப நோயாளி அதிகக் கடுமையாக மண்ணை வெட்டி தானே தலையில் தூக்கி நிலத்திற்குப் போட்டதாகவும் அதி லிருந்து படுக்கையுற்றதாகவும் தெரிவித்தார்கள். ஆர்னிகா 3-ல் 3 வேளைகள் கொடுத்துவிட்டு என் இருப்பிடத்துக்கு அழைத்து வரும் படி தெரிவித்துவிட்டு நான் வந்துவிட்டேன். அன்றே நோயாளியை வண்டியில் ஜாக்கிரதையாகப் புறப்பட்டு மறு நாள் என் இருப்பிடத் திற்கு அழைத்துக்கொண்டு வந்தார்கள்.

நான் வீட்டில் V. R. மூர்த்தி, அல்லென்ஸ் கீ நோட்ஸ், போரிக் முதலியவர்களின் மெட்டீரியா மெடிகாக்களைப் பார்த்து யோசித்து முதலில் (fear of touch) என்பதற்கும் வேலை செய்த அதிர்ச்சியால் ஏற்பட்டதற்கும் போரிக் மெட்டீரியா மெடிகாவில் சிறந்ததாகக் காணப்பட்ட ஆர்னிகா தினம் 3 வேளைகள் 3 தினம் கொடுத்தேன்.

வீக்கங்களில் பெல்லடோன்ன EXQ மேலே தடவினேன். கை கால் முடக்கத்தின் காரணம் உணர கால்களை நீட்டிப் பார்த்தேன். நீட்ட முடியவேயில்லை. வலது இடுப்புச் சப்பைப் பாகங்களிலிருந்து சீழ் பீறிட்டு வந்தது. பிறகு உட்புறம் பார்த்ததும் உட்பாகம் மிகவும் அழுகியிருந்தது. புண்ணில் gauze Calandula EXQ பஞ்சு முதலியவை களால் முறைப்படி ட்ரஸ் செய்தேன். 3 தினங்களின்பின் ஜுரம் கொஞ்சம் குறைவாகக் காணப்பட்டது. Fear of touch உபாதி இல்லை. ஆனல் வலது துடையிலும் இடது தோள்பட்டையிலும் சிதக்கட்டி இருப்பதாகவும் சரியாகப் பழுக்கவில்லையென்றும் உணர்ந்து கல்கேரியா ஹைபோபாஸ் 12-ல் 3 தினங்கள் தினம் 3 வேளை கொடுத்தேன். 3 தினங்களின்பின் கழுத்தின் அருகில் உள்ள கட்டி பழுக்க ஆரம்பித்துப் பழுத்துவிட்டது. இக்கட்டி ஸ்தனக்காம்பு வரையிறங்கி யிருந்ததால் எனக்கு அச்சம் ஏற்பட்டது. தைரியத் துடன் ஆபரேஷன் செய்தேன். முறைப்படி டிரஸ் செய்தேன். உள்ளுக்கு ஸிலிகா 6_X தினம் 3 வேளை கொடுத்துவந்தேன். செப்டிக் ஜுரம் 106° வரை காணப்பட்டது. படுக்கையில் கை கால்கள் பிரிந்து கிடப்பதாக நோயாளி கூறியதால் பாப்டீஷியா 6_X சில வேளைகள் கொடுத்தேன். இக்குறி மாறி சற்றுக் குணம் காணப்பட்டது. பிறகு ரத்தத்தில் சீழ் கலப்பிருப்பதாக அனுமானித்து எக்கினிஷியாQ தினம் 3 வேளைகள் கொடுத்தேன். உபாதி சிறு சமனமேற்பட்டது. பிறகு தன் படுக்கையில் யாரோ படுத்திருப்பதாக அடிக்கடி நோயாளி கூறினர். ஒரு தினம் இரவில் இவ்வித பிதற்றலில் நோயாளியின் தாயார் அழைத்தன்பேரில் இம்மனக்குறியும் மற்றக் குறிகளுக்கும் பெட்ரோலியம் தக்க ஔஷதம் என்று நிச்சயித்து 30 வீரியத்தில் தினம் 3 வேளைகள் கொடுத்துவந்தேன். 3-வது நாள் படுக்கையை பிறர் ஸ்வீகரித்த மனக்குறி மாறிவிட்டது. சப்பைப்புண் 6" வரை யிலும் கழுத்தின் அருகில் உள்ள புண் மார்பில் 4" வரை கீழ்நோக்கியும் பின்புறம் முதுகில் 5" வரை கீழ் நோக்கியும் எலும்புகள் தெரியும் வண்ணம் புரையோடியிருந்தது. நோயாளி மிகுந்த பலஹீனமாகக் காணப்பட்டார். இந்நிலையில் வலது துடையில் வீக்கம் அதிக மாயிற்று. எனக்கோ ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் முயற்சியைக் கைவிடாமல் தைரியத்துடன் அந்தராக்ஸின் 30 ஒரு டோஸ் கொடுத்தேன். பிறகு 2 தினங்கள் கழித்து ஒரு மந்திரவாதி வந்து வைத்திய சிகிச்சைகள் பயன்படாவென்று கூறி நாடி பார்த்து ஓடுபுரிவாயு கட்டியென்று சொல்லி ஒரு கோழி காவு கொடுத்து ஒரே தினத்தில் துடையில் உள்ள கட்டி அமுங்கிவிடும் என்று ரக்ஷை தடை, யோட்டுவிட்டுச் சென்ருன். அன்று மாலையிலேயே வலது துடையை ஆப்ரேஷன் செய்தேன். சுமார் பட்டணம் படி 2 அளவுக்கு சீழ் வந்தது. முறைப்படி டிரஸ் செய்தேன். ஸிலிகா 6_X தினம் மூன்று வேளை கொடுத் தேன். பெனிஸிலின் 6_X தினம் ஒன்ருக இன்செக்ஷன் செய்தேன்.

இரண்டு தினங்களின் பின் வலது துடையில் பெரிய எலும்புகளும் தோலும் தவிர மற்ற சதைப்பாகங்கள் அமுங்கிவிட்டன. இடது துடையிலும் சப்பை பாகங்களிலும் மூன்று இடங்களில் வீக்கத்துடன் கட்டிகள் புறப்பட்டன கொட்டும்வலியுடன். இரவில் அதிக உபாதி, தாக மின்மை, எரிச்சல். சரீரத்தில் பொதுவான வீக்கம் இவைகள் காணப்பட்டன. அபிஸ்மெல். 30. சிலவேளைகள் கொடுத்தேன். வலி வீக்கம் சிறிது சமனப்பட்டது ஒரு வாரத்தின் பின் இடது துடையிலும் சப்பைபாகங்களிலும். சீழிருப்பதாக உணர்ந்து மூன்றிடங்களில் ஆப்ரேஷன் செய்தேன். இவ்விடங்களிலும் அதிக சீழ் வெளி வந்தது. இங்கும் முறைப்படி டிரஸ் செய்தேன். பெட்ரோலியம் 30 கல்கேரியா ஸல்ப் 6x இவ்விரண்டையும் மாற்றி மாற்றி கொடுத்து வந்தேன். (சரீரத்தில் இடுப்பு முதல் முழங்காலின் மேலுள்ள பாகங்கள் வரை. அதிக விஸ்தீரணமுள்ள பாகங்களில் அதிக சீழிருப்பதால் இந்த அதிக சீழ் வெளியேற்றத்தாலேயே உயிருக்கு ஆபத்து நேர்ந்துவிடுமென்று சிலிகாவை நிறுத்திவிட்டு கல்கேரியா ஸல்ப் கொடுத்தேன்.) இது கவனிக்கத்தக்க விஷயமாக என் அபிப்ராயம். பிறகு 10 தினங்களில் சீழ் சிறிது சிறிதாக மட்டுப்பட்டு ஆறி வருவதாக உணர்ந்தேன். இதற்குள் சிகிச்சை ஆரம்பித்து ஒரு மாதத்துக்கு மேலாக ஆகிவிட்டது. இடையில் மலம் வெளியேருததால் எனிமாவும் கொடுத்து வந்தேன். குளுகோஸ், பழங்கள் ரொட்டி முதலியவை சிறிது சிறிதாக சாப்பிடவாரம்பித்தார். இந்நிலையில் எனக்கு நோயாளியின் மேல் நம்பிக்கையேற்பட்டது, நோயாளி மனக் குறிகள் இன்றி தெளிவுடன் காணப்பட்டார். சில தினங்களின்பின் வலது மேற்கையிலும் வீக்கமாரம்பித்து ஒரு கட்டி தோன்றிற்று. சுமார் இரண்டு வாரங்கள் பின் இவ்விடத்திலும் ஆபரேஷன் செய்து முறைப்படி டிரஸ் செய்தேன். ஆபரேஷன் செய்தபின் அதிக ரத்த வெளியேற்றம் மெழுகு போன்ற வீக்கம் இவைகளை யுத்தேசித்து அஸடிக்ஆஸிட் 6 பல வேளைகள் கொடுத்தேன். சில சமயங்களில் விரல் துணிகளில் சுருக் சுருக் என்று குத்தலும் புண்களில் தேன் போன்ற ஒட்டும் தன்மையுள்ள நீர் வடிதலும் காணப்பட்டது. இச் சமயத்தில் கிராபைடிஸ் கொடுத்தேன். பிறகு கால் நகங்கள் அதி சீக்கிரமாக வளர்வதை யுத்தேசித்து ஹீபர் ஸல்பர் கொடுத்தேன். புண்கள் முக்கால் பங்குக்கு மேல் ஆறியும் கால்களில் முடக்கம் மட்டும் நிவர்த்தியாகாமலேயிருந்ததால் உள்ளுக்குக் கொடுக்கும் எல்லா ஔஷதங்களையும் நிறுத்திவிட்டு ஸிமெக்ஸ் 6-12 வேளைகள் கொடுத்தேன். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக சரிவர கால்களை நீட்டவும் முடிந்தது. இரண்டு வருஷங்களாக சரீரத்திலிருந்த கருஞ் சிவப்புப் புள்ளிகளும் மறைந்துவிட்டன.

20—6—52-ல் ஆரம்பித்த சிகிச்சை முறைப்படி நம் ஹோமியோபதி ஔஷதங்களாலேயே 2—10—52 வரை சிகிச்சை செய்து நோயாளிக்கு முற்றிலும் குணமாகிவிட்டது. 4—9—52. முதல் சிறிது சிறிதாக நடக்கவாரம்பித்தார் ஆகையால் இதைப் போல் முடிந்த வரை கவனித்து சிகிச்சை செய்தால் இம் முறையிலேயே குறைந்த செலவில் கடுமையானநோய்களும் குறிகளுக்கேற்ற ஔஷதங்களை. கொடுத்தால், உயிரைக் காப்பாற்றக் கூடும் என்பது கண் கூடு.

இந்நோயாளிக்கு உள்ளுக்கு கொடுக்கப்பட்ட ஔஷதங்கள் :

1, ஆர்னிகா. Q அதிகஉழைப்பாலேற்பட்ட உபாதி தொடுவதில் பயம். அடித்துப் போட்டது போன்றவலி.

2. கல்கேரியா ஹைபோபாஸ்: 12, கட்டிகள் பழுப்பதற்காக.

3. கல்கேரியா சல்ப் 6 x மஞ்சள் நிற சீழ் அடிக்கடி சீழ்கட்டிகள் தோன்றுதல்.

4. ஸிலிகா. 6 x: சீழை வெளிக்கொண்டு வந்து புண்ணை ஆற்ற புரையோடுவதை தடை செய்ய.

5. பாப்டீஷியா. 6 X: கை, கால்கள். தனித்தனியே பிரிந்து கிடப்பதாக தோன்றுதல் செப்டிக் ஜுரம்.

6. எக்கினீஷியா ரத்தத்தில் சீழ் கலப்பு. செப்டிக் ஜுரம்.

7. பெட்ரோலியம் 30 தன் படுக்கையில் யாரோ படுத்திருப்பதாகவும். தன் படுக்கையை பிறர் ஸ்வீகரித்துக் கொண்டதாகவும். தான் தன் படுக்கையை விட்டு விலகி படுத்துக் கொள்ளுதல். சீழ் பிடித்தல்.

8. அந்த்ராக்ஸின்: 30 அதிக எரிச்சல், அரையிடுக்கு கோளங்களிலும் புரையேறவாரம்பித்தல். துர்நாற்றம். அரையாப்பு

9. பைரோஜினியம் 6: செப்டிக் ஜுரம். படுக்கையில் பிறர் இருப்பதாக நினைத்தல்.

10. அபிஸ்மெல்: கொட்டும் வலி வீக்கம் தாகமின்மை எரிச்சல்

11. க்ராபைடிஸ் 12. விரல்களின் நுனியில் சுருக் சுருக்கென்று குத்தல். புண்கள் தேன் போன்ற ஒட்டும் தன்மையுள்ள நீர் வடிதல்.

12. ஹிபர் ஸல்பர் 30 புண்களை தொட்டால் சகிக்காமை காலில் வெகு சீக்கிரமாக நகங்கள் வளருதல்.

13. அஸடிக் ஆஸிட் 6: ஆபரேஷன் செய்தபின் அதிக ரத்த வெளியேற்றம் களைப்பு.

14. வெராட்ரம் ஆல்பம்: நெற்றியில் சில்லிட்ட வியர்வை. கைகால் சில்லிடல், ஜீவ பலம் குறைதல்.

15. ஸீமெக்ஸ்: 6. கால்கள் நீட்டமுடியாமல் முடங்கியே யிருத்தல்.

இவ்வளவு ஔஷதங்களும் குறிகளுக்கேற்றபடி உள்ளுக்குக் கொடுக்கப்பட்டவை.

வெளிப்பிரயோக ஔஷதங்கள்

1. பெல்லடொன்னு E. x. q. வீக்கம் கட்டிகளின் ஆரம்பம்.

2. காலண்டுலா Ex q பொதுவாக தினம் டிரஸ் செய்ய

3. ஹைடிராஸ்டிஸ் Ex. q நாள்பட்ட அழுகிய புண்களுக்கு.

4. கல்கேரியா ஸல்ப் ஆயின்மென்ட் 3x. மஞ்சள் நிற சீழ் வடிதல்.

5. ஹமாமெலிஸ் ex புண்களிலிருந்து ரத்தம் வருதல்.

இந் நோயாளிக்கு காலண்டுலா EX மட்டும் சுமார் இரண்டு பவுண்டு செலவாயிற்று.

இந் நோயாளிக்கு சிகிச்சை செய்ததில் என அனுபவம்.

அதிக சீழ் வெளியேற்றத்தில் பயங்கரமான ஆழமுள்ள மிகப் பெரிய புண்களை ஸிலிகாவை வெகுநாள் நீடித்துக் கொடுப்பது நோயாளியின் நிலைமையை மோசமாக்கி விடும். ஆனால் முதலில் சில தினங்களில் கொடுத்தேயாக வேண்டும். ஊன் வளரும் மிகப் பெரிய புண்களிலும் கல்கேரியா ஸல்ப். 6x. மஞ்சள் நிற சீழ் வரும் காலத்தில் உள்ளுக்குக் கொடுத்தால் பயன் தருகிறது. வெளிப்பிரயோகத்தில் ஊனை வளரச் செய்து வாயைமூடி விடுகிறது. இந்நிலையில் காலண்டுலா வெளிப்பிரயோகந்தான் சரியானது. கல்கேரியா ஸல்ப் ஆயின்ட்மெண்டை உபயோகிக்க வேண்டி வந்தாலும் மூன்று தினங்களுக்கொரு முறையாவது காலண்டுலா வெளிப்பிரயோகமும் செய்து வந்தால். புண் சீக்கிரம் ஆறும். காலண்டுலா எந்த நிலைமையிலும் பயன் தருகிறது. ஹைடிராஸ்டிஸ் நீடித்த பழைய புண்களுக்கும். அழுகிய ரணங்களுக்கும் பூந்தசை சம்மந்த புண்களுக்கும் பயன் தருகிறது. ஹமாமலிஸ் ரணங்களில் ரத்தப் பெருக்கில் பயன் தரும்.

அனுபவ கேஸ் விபரம்

(Dr. M. D. Thandavaryan M. I. H. VIRAGALUR, LALGUDY, T. K.)

(அபிஸ்மெல்லிபிகாவின் அதிசயத்தொண்டு)

பெயர். தோமாஸ்

இடம் விரகாலூர், லால்குடி. தாலுக்கா,

மாலை 3 மணிக்கு மேல், 2 தினங்களாக குளிருடன் சுரம் ஏற்படுகிறது. சிறு நீர் விடும் போது வலியும், அத்துடன் இரத்தமும் ஒவ்வொரு துளி மிகவும் கஷ்டத்துடன் வெளியாகிறது. ஆனால் இரத்தம் அதிகமாக வெளியாகவில்லை, மூத்திரத் துவாரத்தில் இரணம்போன்றவலி இருக்கிறது. வலது பக்கத்து விரை வீக்கம். வீக்கம் இளநீர்போல் பெரியதாகி, வலது பக்கத்து தொடையில் நெறி கட்டிக் கொண்டு வலி. வலது விரை வீக்கத்தினால் தாங்க முடியாத வலி, குளிர் சுரம்; 2 நாட்களாக பச்சிலை, கழஞ்சிக்காய் முதலியன மேல் பூச்சு பூசியும் உபாதைகள் கொஞ்சம் கூட குறையவில்லை. வீக்கமும் அப்படியே இருக்கிறது. உபாதைகள் பொறுக்கமுடியவில்லை. தெரிவித்தார்.

தனியாக விசாரித்ததில் போதைவஸ்துக்கள் உபயோகித்தல் நடத்தை கவனியாதிருத்தல் முதலியன, தர்மாமீட்டர்மூலம் பரிசோதனை செய்ததில் சரீரஉஷ்ணம் 102 F. இருந்தது. 18—10—52, மாலை 4 மணிக்கு, அபிஸ்மெல்லிபிகா 200 x 3 துளி, 1CC, டிஸ்டில்ட்வாட்டருடன் Intra Muscular இஞ்சக்ஷன் செய்து, அபிஸ், மெ. மாத்திரைகள் 200 x 3 மணிக்கொரு தரம் சாப்பிடும்படி சொல்லிவந்தேன். அடுத்தநாள் நம்மிடம் வந்து தெரிவித்தார்.

தாங்கள் இஞ்சக்ஷன் செய்த சிலநிமிஷங்களுக்குப் பின் அதிகக்குளிருடன் சுரம் அதிகமாகி வலியும் பொறுக்கமுடியாமலிருந்தது. இன்று வலதுபாகத்து விரை வீக்கம் முக்கால் பாகம் வடிந்து விட்டது என்றும், சுரம் அன்று இரவு 9 மணிக்கு

கொஞ்சம் கூட இல்லை என்றும் மிகவும் சந்தோஷத்துடன் தெரிவித்து, இன்னும் மருந்து சாப்பிடலாமா என்று தெரிவித்தார். 2-வது நாள் அபிஸ் 200xல் கொடுக்கப்பட்டது. 3-வது நாள், 'விரைவீக்கமெல்லாம் குறைந்து, சுகதிரேகமானது பற்றி, நம்மிடம் வந்து மிகவும் அதிசியத்துடன் நம் ஹோமியோபதியின் தெய்வீக சக்தியைப் பற்றி புகழ்ந்து பாராட்டினுர்.

நம் ஹோமியோபதியில், குறிகளுக்குத் தக்கபடி ஆராய்ச்சி செய்து தேர்ந்தெடுக்கப் பட்ட ஔஷதம் அரையணு விலையுடையதாயிருப்பினும் ஆயிரம் பொன் பெறுமென்பதை அனுபவத்தில் தெரிந்து கொள்ளலாம்.

எல்லா ஹோமியோபதி - பயோகெமிஸ்டிரி ஔஷதங்களும் எல்லா வீரியங்களிலும் எங்கள் சென்னை ஆபீசில் நேரில் வாங்கலாம்

★

சென்னை விலாசம்:

289, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு,
(China Bazaar, Opp. Fruit Market.)
சென்னை—1

★

தபால் ஆர்டர்கள் எப்பொழுதும்போல் நமது கும்பகோணம் ஆபீஸில் கவனிக்கப்படும்.

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்
ஹோமியோ ஹவுஸ் :: கும்பகோணம்

வயிற்றில் மருந்து

(R. ராஜசேகரன் M. I. H.)

I. புகைவண்டி நிலையத்தில் இருவரின் உரையாடல்

குணசீலன்: மருந்து எடுப்பதில் அவருக்கு ஈடே கிடையாது. எப்படிப்பட்ட மருந்தாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் மூன்றே நாளில் சுகமாகிறது. சாதாரணமாக மூன்று நாளும் ஒரு எண்ணெயை சாப்பிடக் கொடுக்கிறார். அவ்வளவுதான்; மருந்து அவர்கள் வைத்தது வைத்தபடி, அதோடு சேர்த்துவைத்த லட்டு, அல்வா, வாழைப்பழம் இவற்றோடேயே வருகிறது.

தர்மநாதன்: மருந்து நிறம் என்ன?

குணசீலன்: அது கருப்பாகவோ, அல்லது பச்சையாகவோ இருக்கிறது. அதை மாமிசத்துண்டோடுகூட சேர்த்து வைப்பார்களாம்.

II. குக்கிராமவாசியொருவர் இராணுவத்திலிருந்து விடுவந்த தம்பியிடம்

அண்ணன்: தம்பி: எனக்கு நீ போனநாளா சதா வயித்துவலி, சாப்பிட முடியாதில்லே, வேலேகூட செய்யமுடியாது. சும்மா மயக்கமாதானிருக்கும். இப்படியாகக் கஷ்டப்பட்டுக்கிடந்தேன். வவுத்துலே மருந்து இருக்கும்மின்னுங்க. எங்கெங்கெல்லாமோ மருந்து வாங்கி சாப்பிட்டேன். ஒண்ணுலகூட குணமாவுல்ல. கடசியா: மவராசன், நல்லாயிருக்கணும். அவுரு ஒரு எண்ணெயை கொடுத்து தித்தாரு. எண்ணெய குடிச்சதும் வாந்தியும் வவுத்தாலியும்னு சொல்லி முடியாது. அதுல தம்பி; அந்த மருந்து கருப்பாவும், பச்சையாவும், லட்டுத் துண்டோடியே வந்து விழுந்தது. அப்பறந்தான் கொஞ்சம் சுகமாருக்குது.

தம்பி: ஆமாம்; நீங்க எப்போதாவது லட்டு சாப்பிட்டதுண்டா?

அண்ணன்: லட்டக்கண்டதாறு தம்பி. நானு தின்னதே யில்லியே அந்த மருந்து வந்ததும், லட்டோடேசேத்து வைச்சிருக்கான்னு வைத்தியர் சொன்னாரு. அதுகூட மஞ்சளாத்தானிருந்திச்சி. அது ரொம்பநாளானா ஆளியே கொண்ணுடுமாமில்லே.

தம்பி: மருந்தை யார் அண்ணா வைத்தது?

அண்ணன்: அதெல்லாமா தெரியுது. எவளோ என்னை மயக்கு வைச்சிருக்கிறா. அதுத்தான் அம்புட்டு தொல்லே பண்ணிட்டுது.

தம்பி: வைத்தியத்நுக்கு செலவு என்ன அண்ணு?

அண்ணன்: சும்மா ஆறு ரூவாதான். நல்லா ஆன அப்பரம் ஒரு ஜோடி வேட்டி வாங்கித்தரனும்னுங்க. அதெக்கூட வாங்கித்தந்துட்டேன்.

III. ஒரு வீட்டில்

வந்தவர்: யார் வீட்டில்?

வீட்டுக்கார மாது: யாரது? என்னுங்க சமாச்சாரம்?

வ: எங்கம்மா உங்கள் புருஷன்.

வீட். மா: உடம்பு சரியில்லிங்க, படுத்திருக்காரு.

வ: என்ன உடம்புக்கு. நம்மூர் வைத்தியரிடம் காட்டி ஏதாவது மருந்து கொடுக்கச்சொல்வதுதானே.

வீ. மாது: சொல்லி என்ன செய்வதுங்க. மூன்று வருஷத்துக்குமுன் அவர் வயிற்றிலே மருந்து இருந்ததுஎன்று நம்மூர் வைத்தியர்தான் 10 ரூபாயும், 1ஜோடி வேட்டியும் வாங்கிக்கொண்டு மருந்து கொடுத்தாறு. இவ்வளவு நாளும் நன்ருகத்தானிருந்தது. இப்ப மறுபடியும் வயிற்றுவலி வந்துவிட்டது. முன்பு எடுத்த மருந்து கொஞ்சம் பாக்கி தங்கியிருக்கும் என்கிருர்கள். எங்கேயாவது ரூபாய் வாங்கித்தான் வைத்தியம் செய்ய வேண்டும்.

மேலே கண்ட செய்திகள் சிற்சில சமயங்களில் என் செவியில் விழுந்ததுண்டு. இச்செய்திகள் என்னையறியாமலே என் மனத்தில் பல கேள்விகளைக் கேட்டன. அவற்றின் பதில்களைக் காணும்போது, மேற்கண்ட நிகழ்ச்சிகள் பொய்யா? அன்றி; என் ஆலோசனை பொய்யா? என்ற சந்தேகம் எழுந்தது. நானும் ஹோமியோபதி படித்திருந்ததால் மீண்டும் ஆராய்ந்தேன். அதில் கண்ட உண்மைகளை உறுதிப் படுத்த சிறந்த சித்த வைத்தியர் ஒருவரிடம் பின்கண்டவாறு உரையாடினேன்.

என் கேள்வி: அய்யா! வயிற்றிலே மருந்து இருப்பதாகச் சொல்கிருர்களே, அது உண்மையா?

வைத்தியரின் பதில்: இருப்பது உண்மைதான். அதாவது யாரேனும் வைத்திருந்தால் அது வயிற்றிலேயே இருந்துகொண்டு பல தொந்திரவுகள் செய்யும்.

எ: கே: தாங்கள் நோயாளிகளுக்கு கொடுக்கும் மருந்துகளும் அப்படியேதான் வயிற்றில் தங்கிவிடுகிறதா?

வை: ப: நான் கொடுப்பது தங்காது. அது ஆகாரத்தைப்போல் சீரணிக்கப்பட்டு இரத்தத்தோடு சேர்ந்து, நோயைக் குணப்படுத்தும். மருந்து என்பது பெண்கள் சிலர், சில ஆடவர்களை மயக்க (வசீகரிக்க) வசிய மருந்து செய்து அதை உணவுப் பொருள்களோடு சேர்த்து கொடுத்து விடுவார்கள். அதுதான் சீரணிக்கப் படாமல் வயிற்றிலேயே தங்கிவிடும்.

எ: கே: நல்ல ஒரு ஆடவனை மயக்க விரும்பும் பெண், அவன் நல்ல நிலையில்தானே இருக்க விரும்புவாள். அவன் நோயினால் துக்கப்பட விரும்பமாட்டாளே?

வை: ப: நினைக்க மாட்டாள்.

எ கே அப்படியெனில் நன்மையை நாடி கொடுத்த மருந்து தீமையை விளைவிப்பதாகுமா? தாங்கள் சுரத்தைத் தணிக்க கொடுத்த மருந்து, சன்னியையும்; காதடைப்புக்கு கொடுத்த மருந்து, சிறுநீர் அடைப்பையோ (சிறுநீர் தேக்கம்) அன்றி மூச்சடைப்பையோ உண்டுபண்ணுமா?

வை: ப: என் மருந்து அப்படிச் செய்யாது. ஆனால் வசிய மருந்து தான் வயிற்றில் தங்கி வேதனையை உண்டாக்குகிறது.

எ கே குழந்தைகள் தெரியாமல் விழுங்கிவிடும் அரையணா, தம்பிடி, புளியங்கொட்டை, மொச்சை இவையும் வயிற்றில் தங்கிவிடுகிறதா?

வை ப இவை மலத்தோடு சேர்ந்து வெளியே வந்து விடும்.

எ கே கரையக்கூடாத பொருள்கள் வந்துவிடும்போது கரையக் கூடிய மருந்து மட்டும் ஏன் வருவதில்லை?

வை: ப: அது என்னவோ எனக்கு தெரியவில்லை. மருந்து மட்டும் வைத்தியம் செய்தால்தான் வரும். நானும்கூட எத்தனையோ பேருக்கு மருந்து எடுத்திருக்கிறேன்.

எ. கே மருந்து எடுப்பது எப்படி? நிறம் என்ன? அது மட்டும்தான் வருமா?

வை. ப: ஒரு எண்ணெய் செய்து வைத்திருக்கிறேன். அதை மூன்று அல்லது ஐந்து நாள் சாப்பிடக்கொடுத்தால் மருந்து பேதி மூலம் வந்து விழுந்துவிடும். மருந்து கருப்பாகவும், நாட்பட்டவை பச்சை, மஞ்சள் நிறமாகவும் இருக்கும். அதுமட்டும் வராமல் அதோடு சேர்ந்து வைத்த லட்டோ, பழமோ, அல்லது மாமிசத்துண்டோ வருவது வழக்கம்.

எ: கே: மருந்து எடுத்தபின் மீண்டும் மருந்து இருப்பதாகச் சொல்லுகிறீர்களே. ஏன்?

வை: ப: மருந்து எடுக்கும்போது சிலருக்கு சிறிது மருந்து தங்கி விடுவதுண்டு. அந்த மருந்து மறுபடியும் வயிற்றில் வளர்ந்து சுமார் 1½ அல்லது 2 ஆண்டுகள் கழித்து உபத்திரவம் செய்யும்.

எ. கே: மருந்து இருக்கிறதை எவ்வாறு தெரிந்துகொள்வீர்கள்? அவருக்குள்ள குறிகள் என்ன என்பதையும் சற்று சொல்லுங்கள்.

வை. ப: மருந்து இருப்பதாக சொல்பவர்களின் உள்ளங்கையில் முருங்கைச்சாரை விட்டால் அது 15 நிமிடத்தில் உரைந்துவிடும். உரைத்தால் மருந்து இருக்கிறதென்றும், உரையாவிடில் மருந்து இல்லையென்றும் தெரிந்து

கொள்ளலாம். மேலும் அவர்கள் சதா வயிற்றுவலியினுல் அவதிப்படுவர். ஆகாரம் உண்ண முடியாது. உண்ணும் சிறிது ஆகாரமும் உடனே வாந்தி எடுக்கப்படும். ஒக்காளமும், வாயில் கசப்பு ருசியும் அதிகம் உண்டு. மூக்கு, வாய் இவற்றில் அடிக்கடி வேப்பெண்ணெய் போன்ற நாற்றம் வீசும். கண், நாக்கு, நகம் இவை மஞ்சள் நிறமாக மாறியிருக்கும். மூத்திரமும் மஞ்சள் நிறமாகும். நோயாளி அதிக பலவீனமாகவும், அசதியுடையவராகவும் இருப்பார்கள். அடிக்கடி சுரமும் தலைவலியும் ஏற்படக்கூடும்.

நான்: தாங்கள் சொன்னது சரி; நான் சொல்வதை சிறிது கவனித்துக் கேளுங்கள். உங்களுக்கு புரியாததைக் கேட்டால் சொல்கிறேன். அவற்றை நீர யோசித்து முடிவு சொல்லுங்கள். நான் சொல்வது தப்பு எனில், காரணத்தோடு விளக்கினுல் நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனுல் என்னை எதிர்க்கட்சிக்காரன் என்றும், ஹோமியோபதி படித்ததால் இவ்வாறு விதண்டவாதம் பேசுகிருன் என்றும் சொல்ல வேண்டாம்.

வைத்தியர்: சரி; நீங்கள் சொல்லுங்கள். யோசித்துப்பார்ப்போமே அதையும்.

நான்: வசியமருந்து என்பது இருக்கலாமெனினும் அது வயிற்றில் தங்குவது முடியாது. அதை ஒத்துக்கொள்ளவும் முடியாது. அதன் காரணங்கள் முன்பு நாம் பேசியதிலேயே சிறிது விளங்கும். மேலும் பார்த்தால் நாம் உட்கொண்ட ஆகாரம் வாய், அன்னப்பை, சிறுகுடல் ஆகிய பல பகுதிகளில் சீரணிக்கப்படுகிறது. இவ் வேலைக்கு உதவியாக உமிழ்நீர், ஜாடராக்கினி (Gastric Juice) பித்தநீர் (Bile) மதுரசம் என்னும் திராவகம் (Pancreatic Juice) ஆகியவை நம்முடலிலேயே உற்பத்தியாகின்றன. இவற்றில் பித்தநீர் (Bile) கல்லீரலில் உற்பத்தியாகி பித்தப் பைகளில் சேமிக்கப்பட்டு, சிறிது சிறிதாக பித்தநீர்குழாய்மூலம் சிறுகுடலுக்கு வந்து; அன்னப்பையினின்றும் அங்குவந்துள்ள ஆகாரத்திலிருக்கும் நிணபதார்த்தங்களை (Fats) சீரணிக்கிறது. இந்நீர் குறைவாக உற்பத்தியானுல் ஆகாரம் சீரணிக்கப்படாது. அதிக அளவில் உற்பத்தியானுலும் ஆகாரம் சீரணிக்கப்படுவதில்லை. அதிகம் உற்பத்தியாயின் இது பித்தப்பையிலேயே உரைந்து மணல்போலாகி (பித்தகற்கள்) அங்கிருந்து குழாய்மூலம் வரும்போது ஊசிகுத்துதல் போன்ற வலியை உண்டாக்கும். சில சரீரங்களில் அதிகமாக உற்பத்தியாகும் நீர் சிறுகுடலுக்கு வந்து, தேவைப்பட்டதுபோக எஞ்சியவை சிறுகுடலின் உட்புர ஓரங்களிலுள்ள ஆமத்வசம் என்னும் மியூகஸ்மெம்ரேன் (Mucous Membrane)களில் ஒட்டிக்கொள்ளுகிறது. இவை அதிகமாக சிறுடலில் தங்கினுல் அங்கேயே இது மஞ்சள் நிறம் மாறி பச்சை, கருமை ஆகிய வர்ணங்களையடைகிறது. இத்தேக்கம் அதிகமானமுதலே சத்துப்பொருள்களோடு பித்தநீரும்சேர்ந்து இரத்தத்தையடைந்து நீர் முன்சொன்ன எல்லாக் குறிகளையும் உண்டாக்குகிறது. இந்நிலையை மஞ்சட்காமாலைக்கும் ஒப்பிடலாம்.

வை. கேள்வி: ஏன் சார்? மற்றபொருள்கள் வயிற்றில் தங்காது என்று சொல்லும்போது இந் நீர் மட்டும் அதிகநாள் தங்குவது எப்படி?

என் பதில்: சரீரத்திற்கு தேவைப்படாத பொருள்கள் இரத்தத்தில் சேர்ந்து வியர்வையாகவும், மூத்திரமாகவும் வெளியேறிவிடும். ஆனால் பித்த நீர் அதிகம் உற்பத்தியாவதே ஏற்கெனவே உடலில் தோன்றியுள்ள நோயின் காரணத்தினல்தான். முன் ஏற்பட்ட நோய் பித்தநீரை அதிகம் உற்பத்தி செய்து மீண்டும் அந்நீர் இரத்தத்தோடு கலக்கும் நிலை ஏற்படும்போது உடல் தன்னிலையினின்று வழுவி நோயிக்குப் பூரண அடிமையாகிறது. நோய் உடலின் முக்கிய பாகங்களில் ஆட்சிசெய்வதால் அதன் கோரத்தாண்டவம் வெளிக்குறிகளையுண்டாக்குகிறது. இந்த முறையில்தான் பித்தநீர் குடலில் தங்க ஏதுவேற்படுகிறது.

மற்ருெரு முறையிலும் இதையறியலாம். அதாவது: அடிபட்டதால் சரீரத்தில் வீக்கம் ஏற்படுகிறது. அடிபட்ட இடத்திலுள்ள மாமிசமும் கன்னிப் போகிறது. அவ்விடத்தில் இரத்தம் தேங்கி வீக்கத்தையும், வலியையும் உண்டாக்குகிறது. சுகசரீரத்தில் இவ்வாறு ஏற்பட்டபோது, வெந்நீர் ஒற்றிடம் 2, 3 தினங்கள் கொடுத்தால், வீக்கம் வடிகிறது. அங்கிருந்த கெட்டுப்போன இரத்தம் கரைந்து இரத்தத்தோடேயே சேர்ந்துவிடுகிறது. ஆனால் அதிலுள்ள கெட்டுப்போன சிறுபகுதி மட்டும் வியர்வையாக வெளியேறுகிறது. சுக சரீரமானதால் கன்னிப்போன தசைகளும் பழய நல்ல நிலையை அடைகின்றன. ஆனால் நோயானதுமுதலில் அந்தராத்துமாவையே பாதித்து அதன்பின் பித்தநீரை அதிகம் உற்பத்தி செய்வதால் அதை வெளியேற்றும் சக்தி அந்தராந்துமாவுக்கு இருப்பதில்லை. எனவேதான் இந்நீர் குடலில் தங்குகிறது.

இங்கு தாங்கள் செய்யும் வைத்தியம் சரியேயெனினும், அது "கனியை கையால் பரிப்பதை விட்டு கோலால் அடிப்பது" போன்றதாகும். இதற்கு ஹோமியோபதியிலும் சிறந்த மருந்துகள் இருக்கின்றன. அவற்றை குறிக ளுக்குத் தக்கவாறு கொடுத்தால் நிச்சயம் சுகமாகும்.

வை: கே: பேதியானல் அதில் லட்டு போன்றும், பழம் போன்றும் தெரிவதென்ன?

எ: பதில்: பித்த நீரின் நிறம் மஞ்சள். அது நாளடைவில் பச்சை கருமை நிறத்தையடைகிறது என்றேனல்லவா? தங்கள் மருந்து வெகு விரைவில் பேதியை உண்டாக்கும்போது அதில் எண்ணெயும், உணவுப் பொருள்களும், பித்தநீர்க் கட்டிகளும் வருகின்றன. இவற்றில் பச்சையாய் இருப்பதை மருந்து என்றும், மஞ்சளாயிருப்பதை லட்டு என்றும், அதுவும் சிறிது குழகுழப்பாயிருந்தால் வாழைப்பழமென்றும், கருமை நிறத்தை நாட்பட்டதென்றும் கருதுகிறீர்கள்.

வை: கே: ஏன் சார்.... நாங்கள் செய்யும் முறையில்தான் சிக்கல் ஏற்பட்டு மீண்டும் சில ஆண்டிற்குள் அவ்வியாதி தோன்றுகிறதே. அதற்குக் காரணம் என்ன? தாங்கள் கொடுப்பதிலும் இவ்வாறுதான் ஏற்படுமோ?

என் பதில்: தாங்கள் செய்யும் முறையானது "மரத்தை அறுத்து மட்டும் வீழ்த்துதல்" போன்றது. அதில் அடிமரமும் வேரும் அப்படியே இருப்பதால் திரும்பவும் மரம் துளிர்க்கும். அதற்கு உதவியாக வேர்கள் சத்துப் பொருளை கிரகித்துக் கொடுக்கும். வியாதியின் மூல காரணத்தை எடுக்காமல், குடலிலுள்ள நீர்த்தேக்கத்தை மட்டும் பேதிக்கு கொடுத்து எடுத்துவிடுவதால் குடல்தான் சுத்தமாயிருக்கும். பித்தநீர் உற்பத்தி தடுக்கப் படுவதேயில்லை. எனவேதான் மீண்டும் சிலகாலங்களில் அது அதிகம் சேர்ந்து உபத்திரவத்தை உண்டுபண்ணுகிறது. மரத்தை வேரோடு அகற்றினல் எப்படி மரம் துளிர்க்க ஏதுவில்லாமல்போகுமோ, அவ்வாறு நோயின் மூல காரணத்தை நாம் அகற்றவேண்டும். அதாவது நோயின் விளைவான சிறுகுடலிலுள்ள தேக்கத்தை அப்புறப்படுத்துவதோடு, பித்தநீர் அதிகம் உற்பத்தியாகாமலிருக்க ஔடதம் கொடுத்தால் அதன்பின் எவ்வித இடையூறும் ஏற்படாது.

வை: கே: நான் மருந்து எடுத்த சிலருக்குத்தானே இவ்வாறு மீண்டும் மருந்து இருப்பதாக தெரிகிறது. அநேகர் அவ்வாறின்றி சுகமாகத்தான் இருக்கிறார்கள். அது ஏன்?

எ. ப: மருந்தினல் நோயின் விளைவு தடுக்கப்பட்டு, நோயின் காரணமும் தடுக்கப்படுகிறது. வியாதி குணமானபின் அவர் உண்ணும் ஆகாரங்களில் சில மாறுதல்களால் பல கோளாறுகள் நேரலாம். அதாவது சிலர் தாங்கள் முன் பட்ட அவதியை எண்ணி தங்கள் உணவுப் பொருள்களில் மாற்றத்தை உண்டுபண்ணுகின்றனர். சிலருக்கு பித்தத்தை விருத்திசெய்யக்கூடிய உணவுவகைகளே கிடைப்பதில்லை. எனவே பித்தநீர் உற்பத்தி தடைப் படுகிறது. சிலரோ மீண்டும் வரையரையின்றி பல பொருள்களை உண்பதால் அவற்றின்மூலம் பித்தநீர் அதிகம் உற்பத்தியாகிறது. இதனல்தான் மீண்டும் தொல்லைகள் ஏற்படுகின்றன.

வை. கேள்வி: தாங்கள் சொன்னது நன்கு விளங்குகிறது. உண்மையிலேயே வயிற்றில் மருந்து தங்குவது கிடையாதுதான். இதற்கு தங்கள் ஹோமியோபதி முறையில் எப்படி சிகிச்சை செய்வது.

என் பதில்: ஹோமியோபதி மருந்துகளில் இவ்வியாதிக்கு உரியவை :—

அகோனைட்; அர்ஜண்டம் நைட்ரிகம்; ஆர்ஸனிகம் ஆல்பம்; க்ரோடேலஸ் ஹாரிடஸ்; கார்டுஸ் மிரியேனஸ்; கோனியம்; சாமோமில்லா; சின்னினம்; ஸல்ப்யூரிகம்; செலிடோனியம்; சைன; நக்ஸ்வாமிகா; ப்ளம்பம் போடோபில்லம்; டிஜிடாலிஸ்; தராக்சகம்; மெர்கூரியஸ் டல்ஸிஸ்; மெக்னீஷியா மூரியாடிகா; ஹைட்ராஸ்டிஸ், ஸேபியா. இவற்றுள்

"உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்"

என்ற வள்ளுவரின் வாக்குப்படி நோயாளியின் வயது, நோயின் காலம், நோயாளியின் முழு குறிகள் ஆகிய யாவற்றையும் கவனித்து தகுந்த ஔடதத்தை தேர்ந்தெடுத்து கொடுத்துவரின் பூரணசுகம் ஏற்படும். இத்துடன் இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்டின் தயாரிப்பான "காம்லாக்ஸ்" என்ற மலமிளக்கி வில்லைகளை ஆரம்பத்தில் சில தினங்களும், இடையிடையேயும் உபயோகிப்பது நலம்.

வைத்தியர்: என் சந்தேகமே ஒழிந்தது. நானும் இனி ஹோமியோபதியை படிக்க ஏற்பாடுசெய்கிறேன். தாங்களும் அடிக்கடி வந்துபோவது நலம். தங்கள் விளக்கத்திற்கு என் நன்றியுள்ள வந்தனம்.

நான்: சரி. கூடுமானால் மறுமுறையும் சந்திக்கிறேன். வணக்கம்.

டாக்டர் மூர்த்தியின்

"கோல்டுராப்ஸ்"

[காச நிவாரணி]

பாட்டில் ஒன்றுக்கு விலை ரூ. 3–12–0

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

கும்பகோணம்

சென்னை விலாசம்:

289, N. S. C. B. ரோட் - மதராஸ்-1

Edited, Printed & Published by Dr. V. R. MURTY at the Homoeopathy Press
Homeo House, Kumbakonam.